RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21133

# புறநானூற்றுச் சோழ வேந்தர்களில் நலங்கிள்ளியின் மாண்புகள் - ஓர் பார்வை

## வே. ரேணுகா [அ,*]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு- 638012, தமிழ்நாடு, இந்தியா.

# The Greatness of Nalangilli, A Chola King in Purananuru – A Review

## V. Renuka [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women, Erode - 638012, Tamil Nadu, India.

Corresponding Author:
renukadevivv@gmail.com

Received : 09-08-2020
Accepted : 16-01-2021

**ABSTRACT**

Chola kings of Sangam period are so great among the Chera, Chola, Pandiya kings, Vēlir (Heads of small territory) and philanthropists of Puranānūru. Their reigns seems to include the special features of modern democracy. They reformed the forests, improved the water resources and gave a good governance to the citizens. So, they were praised as "the kings of water resources", "possessors of paddy", "Chola kingdom has abundance of rice" etc., relating to the richness of their country. As they nipped the enemies in the bud it self they were called 'killi'; 'chenni' as they had the leadership qualities and 'Valaran', as they ruled an opulent country. To know the greatness of Chola kings in total, Cholan Nalangilli has been chosen, whose dignity has been sung in fourteen poems in Puranānūru. This is like testing with a single cooked rice, the fitness condition of the entire pot. Bringing out the facts about the rule of Cholas, their charity, sympathy, valour, bravery, administrative skills, patronage etc., are the objectives of the paper.

**Keywords:** Puranānūru, Cholan Nalangilli, Chera, Chola, Pandiya kings.

## ஆசிரியர் குறிப்பு



திருமதி. வே. ரேணுகா ஈரோடு மாவட்டம் சோலார் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர். இவர் கோவை பேரூர் தமிழ்க் கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் முதுகலைப் பட்டமும், "கலிங்கத்துப்பரணி தக்கயாகப்பரணி - ஒப்பீட்டாய்வு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றவர். தற்சமயம் ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரியின் சுயநிதிப்பிரிவில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். மேலும், பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளராகவும் செயல்பட்டு வருகின்றார். இவரது இலக்கியப் பணிக்காக உலகத்தமிழாராய்ச்சி நிறுவனமும், தமிழ்மொழி கலைவளர்ச்சி இயக்கமும் இணைந்து 2017 ம் ஆண்டு "இதயக்கனி" விருதினை வழங்கிப் பாராட்டியுள்ளது.

## முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றின் வாயிலாக அறியலாகும் மன்னர்களில் குறிப்பிடத்தக்கவன் சோழவேந்தன் நலங்கிள்ளி ஆவான். இவ்வேந்தனின் வரலாற்றினைப் பதினான்கு புறநானூற்றுப் பாடல்கள் விளக்குகின்றன. அவற்றுள் உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார் உள்ளிட்டப் புலவர்களின் பாடல்கள் நலங்கிள்ளியின் பண்புநலன், வள்ளன்மை, அரசாட்சி முறை, போர்கள், வெற்றிகள் குறித்து தெரிவிக்கின்றன. செவியறிவுறூஉ, பொருண்மொழிக்காஞ்சி ஆகியத் துறைகள் அரசியல் கோட்பாடுகள் குறித்து எடுத்தியம்புகின்றன (Balasubramaniyan, 2007; Avvai Duraisamy Pillai, 1996; Arimathi Thennagan, 1986).

## அரசாட்சி நிலை

சங்ககாலச் சோழராட்சியில் அரசாட்சி பெறும் உரிமையானது வழி,வழியாகத் தந்தையிடம் இருந்து மகனிடம் சென்றடைந்துள்ளது. விதியே தம்மை அரசக்குடியில் பிறப்பித்து நாடாளும் பேறு நல்கியதாக அன்னோர் கருதினர். மூத்தமகன் பிறந்தவுடன் அரசுரிமை முடிவாகி விடுவதால், உரிமைச்சிக்கல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாயம் (புறநானூறு-பாடல்-75)

என்று முன்னோர்கள் இறந்துவிட, வம்சவழி கிடைத்த அரசுரிமையின் சிறப்பு குறித்துச் சோழன் நலங்கிள்ளி குறிப்பிட்டுள்ளான். இதன்மூலம் சங்ககாலப் புறநானூற்றுச் சோழ வேந்தர்களின் அரசுரிமை குறித்த தகவல்கள் உறுதி செய்யப்படுகின்றன.

குடிபழி தூற்றாத செங்கோலனாக ஆட்சிசெய்ய வேண்டுமென்ற எண்ணம் சோழன் நலங்கிள்ளியிடம் இருந்துள்ளது. குடிமக்களிடம் வரிகேட்க வேண்டிய நிலைமை ஆண்மைக்கு இழிவாகும் என்று இவ்வேந்தன் கருதியமை,

குடிபுரவு இரக்கும் கூர்இல் ஆண்மை (புறநானூறு-பாடல்-75)

எனும் வரிகளால் அறியலாகிறது. இரந்து கேட்கப்பட்ட நிலையில் முரசையும், அரசையும், உயிரையும் கொடுப்பதற்கும் நலங்கிள்ளி முன்வந்துள்ளான். இவ்வேந்தனின் பெருந்தன்மையினை,

மெல்ல வந்து என் நல்லடி பொருந்தி
ஈயென இரக்குவர் ஆயின் சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம் (புறநானூறு-பாடல்-73)

எனும் வஞ்சினம் உரைத்த பாடலில் நலங்கிள்ளி புலப்படுத்தியுள்ளான். வடபுலத்து அரசர்கள் குறித்து இலக்கியங்களும், ஏனைய உலக இலக்கியங்களும் அரசுரிமை காரணமாகப் பல்வேறு கொலைகள் நிகழ்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளன. உடன் பிறந்தவரைக் கொன்று அரசக்கட்டிலில் ஏறிய வேந்தர்கள் பலர் உண்டு. பௌத்த சமயத்தின் அருள் நெறியைப் பரப்பிய அசோகனே இளமைக்காலத்தில் தன்னைச் சார்ந்தவர்களைக் கொன்று, அவர்களின் குருதியில் நீந்தியே அரியணைஏறியதாக வரலாற்றாசிரியர் குறிக்கின்றனர். ஆனால், பண்டையத் தமிழகத்தில் மக்களை வருத்தாத, இரப்பவர்க்கு

அரசையும், முரசையும் தரக்கூடிய பெருந்தன்மைப் பாங்குடன் சோழவேந்தர்கள் அரசாண்டுள்ளனர் என அறியலாம்.

எனினும், புறநானூறு காட்டும் சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர்களிடையே புகழ்ப்போட்டியும் இருந்துள்ளது. தாம் ஆளும் நாடு சிறியது என்ற கருதி, அதனை விரிவாக்க வேண்டும் என்னும் ஊக்கத்தால் மூவேந்தர்களும் வெகுண்டுள்ளனர். சேர, பாண்டியரின் குடைகள் சோழன் நலங்கிள்ளியின் குடையினும் தாழப்பறந்தது கண்டு,

இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை (புறநானூறு-பாடல்-31)

என்று கோவூர்கிழார் மகிழ்ந்து பாடியுள்ளார். இதன்வழி, புலவர்கள் ஒருவேந்தனைப் புகழ்கையில் ஏனைய இருவேந்தர்களையும் தாழ்த்திப் பேசியுள்ள தகவல் பெறப்படுகின்றது.

சோழர்களின் போர் நிகழ்வுகளில் சங்கு முழங்குதலும், இடியென முரசு முழங்குதலும் மரபாக இருந்துள்ளது.

முரசு இயம்ப கொடியோர்த் தெறுதலும் (புறநானூறு-பாடல்-29)

என்னும் வரிகள் சோழன் நலங்கிள்ளியின் முரசானது முழங்கத்தொடங்கும் பொழுது, பகைவர்களின் உள்ளம் அச்சத்தால் உறைந்த நிலையில் இருந்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

## கொடைத்தன்மை

புறநானூற்றுச் சோழவேந்தர்கள் புலவர்களுக்கும், பாணர் கூட்டத்திற்கும் பெருங்கொடையை அளித்துள்ளனர். உணவும், உடையும், அணிகலன்களும் மிகுதியும் அளிக்கப்பட்டக் கொடைகளாகும். சிலநேரங்களில் தேர்களும், குதிரைகளும், யானைகளும் கொடையாக அளிக்கப்பட்டுள்ளது (Arimathi Thennagan, 1986).

தங்கத்தை நெருப்பில் சுட்டு, உருவாக்கிய பொன் தாமரைகளை நூலில் கோத்து மாலையாக்கி தமது தலையில் அணிந்த பாணர்கள் மகிழ்வுடன் சூழ்ந்து ஆடும் பேறு பெற்றவன் நலங்கிள்ளி என்பதனை,

புலன் விலைப் பொலிந்த பொலன் நறுந்தெரியல் (புறநானூறு-பாடல்-29)

என்னும் வரிகளால் உணரலாம். இதன்வழி, பொருள்தேடப் புகழ்பாடிய பாணர் சமூகம் சோழர் ஆட்சிக் காலத்தில் பொன் ஆபரணங்களை அணிந்திருந்த தகவல் பெறப்படுகின்றது. நெய் மணக்கும் சோற்றுடன், இனிப்புகள் கொடுத்து பசியாற்றுவதும், பகைவரைத் தாக்கி ஒடுக்குதல் மட்டும் அல்லாது தன்னைச் சேர்ந்தோரின் பசிப்பகையைப் போக்குதலிலும் வல்லவனாகச் சோழன்நலங்கிள்ளி சித்தரிக்கப்பட்டுள்ளான்.

புறநானூற்றுப் பாடல்களில் நெல், கரும்பு இரண்டும் மருதநில விளைபொருட்களாய்க் காட்டப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்தே நாட்டின் வளம் பாடப்பட்டுள்ளது. நலங்கிள்ளி தனது படைவீரர்கள் களிக்கும் படி உணவு உருண்டைகள் அழித்து மகிழ்ந்ததை,

மலரா மாலைப் பந்து கண்டன்ன
ஊன் சோற்று அமலை (புறநானூறு-பாடல்-33)

என்னும் வரிகள் உணர்த்துகின்றது. நெல் வயல்களில் பறவைகளை ஓட்டும் சோழர்குல மறவர்கள் குளத்து மீன்களைச் சுட்டு உண்டுள்ளனர். கள்ளையும், இளநீரையும்

பருகியுள்ளனர். தமது விளைநிலத்து கரும்பினைப் பிடுங்கி ஏனையோர்க்கும் அளித்துள்ளனர் (Kalaiselvi, 2011).

புய்த்து எறி கரும்பின் (புறநானூறு-பாடல்-28)

இப்பாடல் வரிகளின் துணைகொண்டு சோழர்காலச் சமூகத்தில் நெல்லையும், கரும்பையும் முதன்மைப்படுத்தி மன்னர்களின் கொடைத்தன்மை அளவிடப்பெற்றமையை உணரலாம்.

## போரும், படைச்சிறப்பும்

போர் எனும் சொல் 'பொரு" என்னும் வேரில் விளைந்ததாகும். பொரு அல்லது பொருவு எனில் 'ஒத்திருத்தல்" என்பதே பொருள். ஒத்த ஆற்றலும், படைபலமும் உடையவர்களிடம் மட்டுமே புறநானூற்று வேந்தர்கள் சண்டையிட்டனர் என்பதற்கு போர் என்னும் சொல்லே ஆதாரமாக அமைந்துள்ளது. சோழன் நலங்கிள்ளி தான் வாழும் நாட்டிற்குத் தெற்கே அமைந்துள்ள வளமிக்க மலை நாட்டின் மீது போர்தொடுத்து, கோட்டைக்கதவுகளை உடைத்து, நாட்டினைக் கைப்பற்றி, தனது புலிச்சின்னத்தைப் பொறித்துள்ளான். இதனை,

தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்

ஏழ் எயிற்கதவம் எறிந்து கைக்கொண்டு (புறநானூறு-பாடல்-33)

எனும் வரிகள் உணர்த்துகின்றன. இவ்வேந்தனின் படைவீரர்கள் போருக்கு அனுப்பவில்லை எனில் சாவோம் என்று கூறி பொறுமையற்றுக் காத்திருந்துள்ளனர். இந்நிலைக்கு, போர்க்களத்தில் வாள்முனையில் மடிவதே சிறந்த மரணமாகக் கருதப்பட்டதும் காரணம் எனலாம்.

வெல்வதற்கு ஏற்ற காலத்தையும், நேரத்தையும் எதிர்கொண்டு வீரத்தை அடக்கி வைப்பவர்கள் வீரர்கள் ஆவர்.

பொள்ளென ஆங்கே புறமவேரார் காலம்பார்த்

துள்வேர்ப்பர் ஒள்ளி யவர் (புறநானூறு-பாடல்-28)

என்னும்படி, கிழக்குக் கடலிலிருந்து மேற்குக் கடல்வரை வென்ற சோழன் நலங்கிள்ளி, எந்நேரத்திலும் படையெடுத்து வருவான் என்று அஞ்சி வடநாட்டு அரசர்கள் கண் உறக்கம் கொள்ளாமல் நெஞ்சம் நடுங்கி, அவலப்பட்டு இருந்துள்ளனர். உள்நாட்டில் உள்ள பகைவர்கள், உயிர்காத்தல் எனும் நோக்கத்திற்காக அஞ்சி, காட்டுச்சேவல் கூவி எழுப்பும் தினைப்புனத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டிருந்துள்ளனர்.

தொல்காப்பிய புறத்திணைகள் தானைநிலை, யானைநிலை, குதிரைநிலை, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை உள்ளிட்டப் படைகள் குறித்து எடுத்தியம்புகின்றன. இந்நாற்படைகளும் வேந்தர்களின் செல்வப்பெருக்கையும், மேம்பாட்டையும் வெளிப்படுத்தின. அவற்றுள் களிற்றுப்படை வேந்தனின் ஊர்தியாகவும், பெருமிதத்திற்கு உரியதாகவும் இருந்துள்ளது. குதிரைப்படை தேரோடு கூடியும், தனித்த ஊர்தியாகவும் இருந்துள்ளது. செல்வத் தகுதியை குறிப்பதாக தேர்ப்படைத் திகழ்ந்துள்ளது. தறுகண்மை மிக்க வீரர்களின் திரளாக காலாட்படை இருந்துள்ளது. சோழன் நலங்கிள்ளியின் படை, நாற்படையும் பொருந்திய மாபெரும் படையாக புறநானூற்றில் குறிக்கப்பட்டுள்ளது. பனைமரக்

காட்டினிடையே இவ்வேந்தனின் முதற்படைப்பிரிவினர் கடக்கும் பொழுது இளம்நுங்குகளை உண்டனர். இடைப்படைப்பிரிவினர் கடக்கும் பொழுது முற்றிய கனியாகிவிட்ட நுங்குகளை உண்டனர். இறுதிப் படைப்பிரிவினர் கடக்கும் பொழுது கனிமாறி கிழங்காகி விட்ட சுட்ட கிழங்குகளை உண்டனர். இக்கருத்து,

தலையோர் நுங்கின் தீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கினி மாந்தக்
கடையோர் விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்கு நுகர (புறநானூறு-பாடல்-225)

எனச் சோழன் நலங்கிள்ளியின் படைப்பெருக்கத்தைக் காட்டும்படி உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. ஏனை முப்படையினும் காலாட்படை அளவிற் பெரியது என்பது இதனால் உணரப்படும். காலாட்படை என்பது குடியாண்மை உடைய வீரர்களின் பெருங் கூட்டமாகும். இவர்கள் போர்க்;களத்தில் வேந்தனைக் காக்கும் கடமை பூண்டவர் ஆவர்.

## வெற்றி விழாக்கள்

போர்க்களத்தில் பகைவர்களை வென்றதன் நினைவாக வெற்றிவிழாவினைக் கொண்டாடி மகிழ்தல் சங்கச்சோழர்களின் வழக்கமாக இருந்துள்ளது. மறவர்கள் தம் இல்லறத்தாரோடு கூடி விழாநாட்களில் மகிழ்ச்சியுடன் பங்கேற்று வந்துள்ளனர். சோழன் நலங்கிள்ளி தனது வெற்றிவிழா கொண்டாட்டத்தில், புதுமணல் நிரம்பிய வீதிகளின் ஒவ்வொரு மாடத்து வாசலிலும் கிடாவெட்டி மக்களுக்கு விருந்தளித்துள்ளான். இதனை,

வாயில் மாடந்தொறும் மை விடை வீழ்ப்ப (புறநானூறு-பாடல்-33)

எனும் புறநானூற்று வரிகள் உணர்த்துகின்றன. இவ்வாறு, தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் போர்ப்பணிகளாலும், வீரச் செயல்களாலும் கழித்து, மக்களின் நலன் பேணும் நல்லுள்ளம் கொண்டவனாகச் சோழன் நலங்கிள்ளி வாழ்ந்துள்ளான்.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

கேட்பவரது உள்ளத்தைக் கவரும் தன்மை உடையதாகவும், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு சொல்லப்படுவதே சொல் எனப்படும். அத்தகைய சொல்வண்மைதனை புறநானூற்றில் இடம்பிடித்துள்ள தனது பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்தியவர் புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் ஆவார். உடலுக்கு நன்மைதரும் அறுசுவைகளில் ஒன்றாய் கசப்பும் இணைந்திருத்தல் போல புகழ் உரைகளுக்கிடையே வேந்தனுக்கும், சமூகத்திற்கும் தேவையான அறிவுரைகளும் இவரது பாடல்களில் இணைந்துள்ளன.

இல்லை என்போர்க்குஇன்ன ஆகிலியர் (புறநானூறு-பாடல்-29)

என இல்லையென்று வருபவர்க்கு இல்லையென்று சொல்லாமல் வாழ்க, எனச் சோழன் நலங்கிள்ளிக்கு இப்புலவர் அறிவுறுத்தியுள்ளார்.

பாடப்படும் தலைவனின் போர்ச்சிறப்பு, வெற்றிச்சிறப்பு, நாட்டுவளம் ஆகியவற்றுடன் நிலையாமை கருத்துக்களையும் ஏற்றிப் பாடியிருத்தல் உறையூர் சாத்தனாரின் தனித்தன்மையாகும். இவரது கண்குருடு, பிண்டம், கூன், குள்ளம், ஊமை, செவிடு, விலங்குத்தோற்றம், பேதைமை என்னும் எட்டு வகைக் குறைகள் உள்ள மனிதப்பிறவியில்

சிறப்பு எதுவும் இல்லை எனும் கருத்தும், செல்வம் பெருகுவதும், குறைவதும், இறப்பதும், பிறப்பதும் உண்மை என்பதை உலகிற்குக்காட்டி நிற்கும் சந்திரன் எனும் உவமையும் நிலையாமைக் கொள்கைகள் சங்ககாலத்தில் வேரூன்றி நின்றமைக்குச் சான்றாதாரங்களாகும்.

## கோவூர்கிழார்

ஆளுவோர் ஆட்சி செம்மையுற நிகழ அறிவுரைப் பகன்ற சான்றோர் பெருமக்களில் குறிப்பிடத்தக்கவர் புலவர் கோவூர்கிழார் ஆவார். இவர் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் ஆகிய நான்கு புறநானூற்றுச் சோழ வேந்தர்களையும் பாடிய பெருமைக்குரியவர். சோழன் நலங்கிள்ளியும், சோழன் நெடுங்கிள்ளியும் பகைத்த பொழுது இடைநின்று விலக்கியவர். இருவரும் சோழரே என்றும், இவர்கள் முரண்கொண்டது ஏனைய வேந்தர்க்கு மகிழ்ச்சியூட்டுமென்றும் கூறிப் போரை விலக்கமுயன்றவர்.

ஒருவீர் தோற்பினும், தோற்ப நும் குடியே (புறநானூறு-பாடல்-45)

என்று போர் அறத்தை நினைவுபடுத்தியவர். இருவேந்தர்களும் மறமே பெரிதென விடாப்பிடியாக எதிரும் புதிருமாக இருந்து போரிட முயன்ற பொழுது, அறத்தான் வருவதே இன்பம் என்பதை உணர்த்தி வெற்றிதனைப் பெற்றவர் கோவூர்கிழார் ஆவார்.

## ஆலத்தூர்கிழார்

வேந்தர்களின் இறவாப்புகழ் பாடும் கையறுநிலையில் சோழன் நலங்கிள்ளிக்கு இரங்கற்பா பாடியுள்ளவர் ஆலத்தூர்கிழார் ஆவார். சோழன் நலங்கிள்ளியின் இறப்பிற்குப்பின் அவனது நாடு களர்நிலமாகி விட்டதையும், பல வெற்றிகளையும் அறிவித்த அவனது சங்கானது தூக்கணாங் குருவிக்கூடு போலத் தொங்கிக் கொண்டு, இன்றைய அரசனை எழுப்ப வாசலில் காத்துள்ள நிலையையும் குறித்து, வருத்தத்துடன் இப்புலவர் பாடியுள்ளதை,

முள்ளுடைய வியன் காட்டதுவே - நன்றும்
சேட் சென்னி நலங்கிள்ளி கேட்குவன்கொல் (புறநானூறு-பாடல்-225)

என்ற வழி அறியலாம். இப்பகையரசன் யாரெனத் தெரியவில்லை. மேற்கண்ட கருத்துக்களால் ஆலத்தூர்கிழாரின் நன்றியுணர்வு அறியலாகிறது.

## முடிவுரை

புறநானூறு காட்சிப்படுத்தியுள்ள பதினைந்திற்கும் மேற்பட்டச் சோழவேந்தர்களில் மாபெரும் வீரனாகத் திகழ்ந்த நலங்கிள்ளியின் மாண்புகளும், அவனது புகழ்பாடிய புலவர்களையும் குறித்து இக்கட்டுரையில் விரிவாக ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

## References

Arimathi Thennagan, (1986), Purananooru kaatum puthumaigal, Ilakkumi Nilaiyam, Chennai, India.
Avvai Duraisamy Pillai, (1996) Purananooru Moolamum Uraiyum, Kazaga Veliyedu, Chennai, India.

Balasubramaniyan, K.V., (2007) Puraporul in sangam literature, Manivasagar Pathipagam, Madurai, India.

Kalaiselvi, K., (2011), Maravargal in Sangam literature, Kavya Pathippagam, Kavya Veliyeedu, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License